GST ROAD NEWS
CHROMPET
Weekly News Paper
Email:gstroadnews@gmail.com www.gstroadnews.com
Chromepet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar
Vol:13 Issue - 29 02 Nov 2025 - 08 Nov 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902

## தங்கம் விலை கிராமுக்கு 80 உயர்வு

சென்னையில் நவ., 01 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ஒரு சவரன் ரூ.90,480க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,310க்கு விற்பனை ஆகிறது.

LAPTOPS & COMPUTERS
SALES | SERVICES | ACCESSORIES
ஐசர்விஸ்
iService®
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494

FLATS FOR SALE
@ CHROMEPET
Paul Victor Street, Near MIT Bridge
100 Mtrs From GST Road
Deluxe Flats
2 & 3 BHK - 954, 1023 & 1103 sqft
@ PALLIKARANAI
LIC Nagar, (Nr. Velammal New Gen School)
2 BHK Deluxe Flats
GF - 893 sqft & 2nd Floor - 1045 sqft
(With 300 sqft Pvt Terrace)
Just 3-in-one Complex
@ KUMBAKONAM
Solaiappan Street, 100 Mtrs from River Kaveri
700 Mtrs From Kumbeswarar Temple
1 & 2 BHK - 410, 671 & 644 sqft
Balaji Homes
98408 40017 / 88382 74383

mysafetrip
...travel your dreams
HIRING STAFFS - TRAVEL CONSULTANTS
FRESH GRADUATES WELCOME TOO
217, GST ROAD, CHROMPET (OPP. ANANDA THIRUMANA MALIGAI)
NEAR CHROMPET BUS STAND/ RAILWAY STATION
POST YOUR CV TO - careers@in.mysafetrip.com
www.mysafetrip.com 80700 64700

PREMIUM 2 BHK FLATS
@ CHROMPET- RADHA NAGAR
READY TO OCCUPY



2 BHK-992-Sqft
LIFT FACILITY / CCP / AS PER VAASTHU
VRM BUILDERS
98400 34209 / 98408 53756

PAAVAYEE BUILDERS
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial
NEW PROJECT



FLATS @ CHROMPET
JESUPATHAM ST, RADHA NAGAR
LUXURIOUS-3 BHK
CUSTOMISATION AVAILABLE
✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Metro Water ✓ Video Door
NO WATER LOGGING
Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223

PREMIUM FLATS FOR SALE
Bharathiyar Street,Gandhi Nagar
SCAN HERE
PATSON PARAGON
EACH FLOOR ONE FLAT
3BHK-1390 sqft
Lift Till Terrace
Rain Water Harvesting
Automatic Water Control
Video Door Phone
24x7 CCTV on Phone
Covered Car Parking
Possession April 2026
PATSON Construction forever...
www.patsonbuilders.com
99625 12346
off:#353,Chruch Complex,GSTRoad,Chrompet, Chennai- 44

FLATS FOR SALE
@ CHROMPET
NR.R.P. ROAD VIVEKANANDHA NSN SCHOOLS



AVAILABLE
2BHK
901-921 Sqft
AMENITIES
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction
INDIVIDUAL WATER TANK
ANUJ HOMES 81481 11101,94446 54776

## எடப்பாடி மீது செங்கோட்டையன் சரமாரி குற்றச்சாட்டு



அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டிருக்கும் செங்கோட்டையன், எடப் பாடி பழனிசாமிக்கு எதிராக பரபரப்புப் பேட்டி அளித்திருக்கிறார். "எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராவதற்கு பரிந்துரை கடிதத்தை கொடுத்தவன் நான். கொடநாடு கொலை வழக்கில் இருக்கிறார் இ.பி.எஸ்.பழனிசாமி எடுத்த முடிவுகளால் அதிமுக தொடந்து தோல்வியைத் தழுவியது. எடப்பாடி பழனிசாமிக்கு துரோகத்திற்கான நோபல் பரிசு கொடுக்கலாம்" என்றெல்லாம் குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கிறார்.

FLATS FOR SALE
@ CHROMPET
EAST PUDHUVAI NAGAR
AMMAN TEMPLE STREET (VARNA MUTHUMARIAMMAN)



Nr.VAISHNAVA COLLEGE
SARAVANA STORE GATE
200 FT RADIAL ROAD
3 BHK - 1165 Sqft
3 UNITS
ONE FLAT ONE FLOOR
Rs.9000 /- Per Sqft
INCLUSIVE OFF ALL
(Except Reg)
CCTV - CCP- LIFT
AS PER VASTHU
FULLY FURNISHED
MR CONSTRUCTION
90035 29020
95000 35454

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*



4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft
BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*



4 BHK - 1710 Sqft
2 BHK - 867 & 843 Sqft
BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*



3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft
Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction
Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD HDFC BANK SBI

# பசிப்பிணி நீக்கும் அன்னாபிஷேகம்: விரதம் இருப்பது எப்படி?

அன்னாபிஷேகத்தை விரதம் இருந்து தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தவர்களுக்கு, அடுத்த அன்னாபிஷேகம் வரை அன்னத்துக்கு குறைவிருக்காது என்று கூறப்படுகிறது.



### அன்னாபிஷேக விழா

ஐப்பசி மாத பவுர்ணமி தினத்தில் அனைத்து ஆலயங்களிலும், குறிப்பாக சிவாலயங்களில் அன்னாபிஷேகம் நடைபெறுவது வழக்கம். அன்னம் என்பதற்கு உட்கொள்வது, உட்கொள்ளப்படுவது என்று பொருள் உண்டு. தானங்களில் சிறந்ததானமாக அன்னதானம் எப்போதும் இருந்து வருகிறது. இறைவன் திருமேனியில் வைக்கப்பட்ட அன்னம், பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. தட்சன் என்பவனுக்கு 27 பெண்கள். அவர்கள் அனைவரையும் சந்திரன் மணம் முடித்துக் கொண்டான். ஆனால் அவர்களில் ரோகிணியிடம் மட்டுமே அவன் அதிக காதலுடன் இருந்தான். இதுபற்றி மற்ற பெண்கள் தன் தந்தையிடம் முறையிட்டனர். திருமணம் செய்து கொடுக்கும் போது, அனைத்து பெண்களையும் சமமாகபாவிக்க வேண்டும் என்று கூறியிருந்த வார்த்தை சந்திரன் மீறிவிட்டதாக கருதிய தட்சன், சந்திரனுக்கு சாபம் கொடுத்தான். இதனால் சந்திரன் கலை இழந்து தேயத் தொடங்கினான். அதன்பிறகு சாபத்தில் இருந்து மீள, சிவபெருமானை நோக்கி தவம் இருந்தான் சந்திரன். ஈசனின் அருளால் தனது முழு ஆற்றலையும் முழுமையாக சந்திரன் பெற்ற தினமே ஐப்பசி பவுர்ணமியாகும். சந்திரன் பெற்றது போலவே, நாமும் முழு ஆற்றலையும் அடையும் நோக்குடன் தான் ஐப்பசி பவுர்ணமி நாளில், சிவபெருமானுக்கு அன்னாபிஷேகம் செய்து வழிபாடு செய்கிறோம். அந்த ஒளியாற்றலை நாம் பரிபூரணமாகப் பெறுவதற்காகவே ஐப்பசி பவுர்ணமியில் அன்னாபிஷேகம் செய்யப்படுகிறது. சிவலிங்கம் என்பது ஆகாயம். ஆவுடையார் என்பது பூமி. இந்த ஆகாயலிங்கத்துக்கு கடலில் இருந்து தண்ணீரை எடுத்துக் கொண்டு போய் மேகங்கள் மழையாய் பொழிந்து அபிஷேகம் செய்கின்றன. நட்சத்திரங்கள் ஆகாயலிங்கத்துக்கு மாலையாகவும், திசைகளே ஆடையாகவும் இருக்கின்றன. ‘தரை உற்ற சக்தி’ என்ற திருமந்திரப்பாடலின் விளக்கம் இது. ஆண்டவன் என்னும் ஆகாயத்தின், ஒரே கூரையின் கீழ் தான் நாம் அனைவரும் இருக்கிறோம். அதனால் ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து, அதை எந்த விதமான பேதமும் பார்க்காமல் அனைவருக்கும் கொடுக்க வேண்டும். அன்றைய தினம் மாலையில் இறைவனுக்கு அபிஷேகம் செய்து, நன்கு துடைத்து விட்டு, இறைவனின் திருமேனியை மூடும் அளவுக்கு அன்னத்தை சாத்துவார்கள். பிறகு இறைவனுக்கு தீபாராதனைச் செய்யப்படும். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னம் பிரசாதமாக வழங்கப்படும். இறைவனின் திருமேனியில் உள்ள அன்ன அலங்காரத்தைக் களைந்து, அதில் சிறிதளவு அன்னத்தை எடுத்து லிங்கம் போல் செய்து பூஜிப்பார்கள். அதை எடுத்துக் கொண்டு போய், ஊரில் உள்ள குளம், ஏரி, நதி போன்ற நீர்நிலைகளில் விடுவார்கள். இதனால் ஊரில் விளைச்சல் அதிகரிக்கும். அன்னாபிஷேகத்தை தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தவர்களுக்கு, அடுத்த அன்னாபிஷேகம் வரை அன்னத்துக்கு குறைவிருக்காது என்று கூறப்படுகிறது. பலருக்கு செல்வச் செழிப்பில் இருந்தாலும், உணவைக் கண்டாலே வெறுப்பாக இருக்கும். பசி இருக்கும்; ஆனால் சாப்பிட முடியாது. அல்லது சாப்பிட பிடிக்காது. இதை ‘அன்னத்வேஷம்’ என்பார்கள். இப்படிப்பட்டவர்கள், சுவாமிக்கு அன்னாபிஷேகம் செய்து, அந்த அன்னத்தை, எந்தவித விளம்பரமும் இல்லாமல் ஏழைகளுக்கு தானம் செய்து வந்தால், அன்னத்வேஷம் விலகும். ஒருவன் எவ்வளவு பெரிய, பெரிய தானதர்மங்களைச் செய்தாலும் கூட, அவை அனைத்தும் பசி என்று வரும் ஒருவருக்குச் செய்யும் அன்னதானத்திற்கு ஈடாகாது. இறைவனுக்கு நடைபெறும் அன்னா பிஷேகமும், அதை அனைவருக்கும் கொடுக்கும் முறையும் உணர்த்துகிறது.

# வீட்டிலேயே சிவனுக்கு அன்னாபிஷேகம் செய்யலாமா?



ஐப்பசி மாதத்தில் சிவன் கோவில்களில் நடைபெறும் மிக முக்கியமான வழிபாடு அன்னாபிஷேகம். உலகிற்கே படையளக்கு ஈசனுக்கு அன்னத்தால் அபிஷேகம் செய்யும் நாள் இதுவாகும். சிவனுக்கு செய்யப்படும் இந்த அன்ன அபிஷேகத்தை தரிசிப்பவர்களுக்கு பல கோடி புண்ணியமும், சொக்கத்தில் இடமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கோடி புண்ணியம் செய்தவர்களுக்கு மட்டுமே அன்னாபிஷேகம் தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைக்கும் என்பார்கள். சிவனை வழிபட்டாலும், தரிசித்தாலும், சிவபூஜை செய்தாலும் மிகப் பெரியபுண்ணியம் வரும் என்பார்கள். அதனால் அன்னாபிஷேகத்தை தரிசனம் செய்வதற்காக அனைவரும் கோவிலுக்கு செல்வது வழக்கம். ஆனால் வீட்டிலும் சிவனுக்கு அன்னாபிஷேகம் செய்து வழிபடலாம். இப்படி வழிபடுவதால் இருந்த இடத்தில் இருந்தே சிவனின் அருளையும், அன்னாபிஷேகம் செய்து வழிபட்ட புண்ணிய பலனையும், சிவனிடம் நாம் முன் வைக்கும் கோரிக்கைகள் நிறைவேறவும் முடியும்.

### வீட்டில் சிவலிங்கத்திற்கு அன்னாபிஷேகம்:

இந்த ஆண்டு நவம்பர் 5ம் தேதி ஐப்பமி மாத பௌர்ணமி வருகிறது. வீட்டில் ஒரு கிலோ அளவிற்கு பச்சரியை புதிதாக வாங்கி வந்து, அதை குளைய வடித்து, நன்கு ஆற வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். முதலில் பூஜை அறையில் விளக்கேற்றி வைத்து, கை நிறைய பூ எடுத்து ஓம் நவசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரம் சொல்லி, சிவனை மனதார வழிபட வேண்டும். பிறகு சிவலிங்கத்திற்கு சுத்தமான நீர், பால், தயிர், சந்தனம் ஆகிய பொருட்களால் அபிஷேகம் செய்ய வேண்டும். பிறகு அவற்றை தண்ணீரால் சுத்தமாக கழுவி விட்டு, வடித்து ஆற வைத்துள்ள அன்னத்தை சிவலிங்கத்தின் மேற்பகுதியில் துவங்கி, கீழ் வரை மொத்தமாக அன்னத்தால் மூழ்கும் படி செய்ய வேண்டும். வீட்டில் சிவலிங்கம் இல்லாதவர்கள் பச்சரிசி வாங்கி வடித்து வைத்துக் கொள்ளுங்கள். அதோடு சிறிது துவரம் பருப்பு புதிதாக வாங்கி, அதையும் தனியாக நன்கு குளைய வேகவைத்து எடுத்துக்கொள்ளுங்கள். சுத்தமான பசுநெய் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். முன்பு சொன்னது போல் விளக்கேற்றி, பஞ்சாட்சரம் சொல்லி கை நிறைய பூக்கள் எடுத்து சிவனுக்கு சமர்பித்து, வழிபட வேண்டும். பிறகு ஒரு தாம்பூலத்தில் அன்னத்தை பரப்பி வைத்துக் கொள்ளுங்கள். அதன் மத்தியில் குழி பறித்து பருப்பையும், அதற்கு மத்தியில் நெய்யையும் விட்டு சுவாமி முன்பு வைத்து விடுங்கள். பிறகு கண்களை மூடி, ஓம் நம சிவாய மந்திரத்தை தொடர்ந்து சொல்லிய படியே மனதார சிவலிங்கம் உங்கள் முன்பு இருப்பது போல் நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் இருக்கும் வேண்டுதல், கோரிக்கை, மனக்குறை என எதுவாக இருந்தாலும் அதை சிவனிடம் சொல்லி முறையிடுங்கள். பிறகு கண்களை மெல்ல திறந்து, பஞ்சபாத்திரத்தில் வைத்திருக்கும் நீரை இடது கையால் எடுத்து வலது கையில் விட்டு, வீட்டில் சுவாமி முன்பு வைத்திருக்கும் அன்னத்தை மூன்று முறை சுற்றி சுவாமிக்கு சமர்பியுங்கள். லிங்கத்திற்கு சாத்தி இருந்தாலும் சரி, தாம்பூலத்தில் பரப்பி வழிபட்டாலும் சரி அந்த சாதத்தை எடுத்து, நன்கு சேர்த்து குளைத்து பிசைந்து சிறு உருண்டையாக பிடித்து வீட்டில் உள்ளவர்களுக்கும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் பிரசாதமாக வழங்குங்கள். இதனால் அன்னாபிஷேகம் செய்து வழிபட்ட பலனும், சிவபெருமானின் அருளும் முழுவதுமாக கிடைக்கும். சிவனிடம் நீங்கள் முன்வைத்த கோரிக்கை நிச்சயம் நிறைவேறும்.

# ஐப்பசி மாத பிரதோஷ விரதத்தின் பலனும் மகிமையும்

சிவபெருமானுக்குரிய விரதங்களுள் மிகவும் விசேஷமானது பிரதோஷ விரதம். தோஷம் என்றால் குற்றம் என்றும், பிரதோஷம் என்றால் குற்றமற்றது என்றும் பொருள்தரும். ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை என்னும் 2 காலங்களிலும் வருவது பிரதோஷ தினமாகும். இந்த வேளையில் சிவ பெருமானை வழிபாடு செய்வதே இந்த விரதத்தின் நோக்கம். ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறை பிரதோஷ வேளையில் இறைவனை வழிபடுவதால் நமது முற்பிறவி குற்றங்கள், சகல தோஷங்கள் நீங்கி நலம் கிடைக்கும். பாவம் விலகி புண்ணியம் சேரும். வறுமை அகலும். மரணபயம் நீங்கும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் மகப்பேறு பெறுவர். பிறவி ஒழித்து முக்தி பேற்றினை அடைவர். கல்வியில் மேன்மை பெறுவார்கள். உலகை காக்கும் பொருட்டு நன்மையை நமக்குத் தந்து தீமையான விஷத்தை தான் ஏற்றுக் கொண்டார் இறைவன். இவ்வாறு உலகை காத்த உத்தமனான இறைவனை மனமுருக வேண்டி வழிபடும் தினமே பிரதோஷம். பிரதோஷ தரிசனத்தால் கடன், வறுமை, நோய் பயம் போன்றவை விலகும். “நந்தியம் பெருமான் தன்னை நாடோறும் வணங்குவோருக்கு புந்தி யில் ஞானம் சேரும், பொலிவுறு செல்வம் கூடும். குலமுறை தழைத்தே ஓங்கும், குணம் நிறை மக்கள் சேர்வர் சிந்தையில் அமைதி தோன்றும் சிறப்புறும் வாழ்வு தானே.” (என்ற பாடல் பிரதோஷ மகிமையை வலியுறுத்தும்). பிரதோஷ வேளையில் அனைத்து தேவர்கள், முனிவர்கள், சிவாலயத்தில் ஒன்று சேர்வதால் பிரதோஷ வழிபாடு அனைத்துக் கடவுள்களையும் ஒன்றாக வழிபட்ட புண்ணிய பலனை வழங்கும்.

# ஐப்பசி மாத பௌர்ணமிக்கு ஏன்? இந்த சிறப்பு.

ஐப்பசி மாதப் பௌர்ணமிக்கு ஒரு சிறப்பு உண்டு. அன்றுதான் சந்திரன் தனது சாபம் முழுமையாக நீங்கி பதினாறு கலைகளுடன் முழுப் பொலிவுடன் திகழ்கிறார். ஆன்மிக ரீதியாக மட்டுமன்றி அறிவியல் ரீதியாகவும் இதற்கு ஆதாரம் இருக்கிறது. அக்டோபர், நவம்பர் (ஐப்பசி) மாதத்தில்தான் நிலவு, பூமிக்கு மிக அருகில் வந்து தனது முழு ஒளியையும் பூமியை நோக்கி வீசுகிறது என்கிறது வானவியல்.

# ஐப்பசி மாத ஏகாதசி

ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்த மாமன்னன் இராஜராஜ சோழனை சிறப்பிக்கும் வகையில் சதய விழா கொண்டாடப்படுகிறது. இந்த மாத வளர்பிறை ஏகாதசி ‘பாபாங்குசா’ எனப்படும். இந்நாளில் விரதமிருந்து இறைவனை வழிபட, வறுமை நீங்கும். பாப விமோசனம் பெற, பசி பிணி நீங்க இந்த விரதம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த மாத தேய்பிறை ஏகாதசி ‘இந்திரா ஏகாதசி’ என அழைக்கப்படுகிறது. இதனால் நம் பாவம் மட்டுமன்றி, நம் முன்னோர்கள் செய்த பாவமும் நீங்கும்.


# CLASSIFIEDS

## RENTAL

RENT FOR ROOM @ CHROMPET
WITH ATTACHED BATHROOM AND FURNISHED AC
WORKING GIRL OR STUDYING GIRL
NEAR MIT BUS STOP GST ROAD
RENT RS 8300 /= (EB EXTRA)
94450 02427

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2 BHK
PURE VEG
8072230451

## BUILDING CONTRACT

HARIKRUPA CONSTRUCTION
→ CONSTRUCTION
→ INTERIOR
→ RENOVATIONS
→ PAINTING
94440 50507
98848 89904

## PLOT SALE

PLOT FOR SALE
@ EAST TAMBARAM
NR SANKARA SCHOOL
1600 Sqft PATTA
SITHALAPAKKAM
ARASAN KAZHANI
1300 Sqft
97898 41521

PLOT FOR SALE
@CHITLAPAKKAM MAIN ROAD
1 GROUND LAND
Rs.10,000/ - Per Sqft
FLAT FOR RESALE
@ PERUMBAKKAM
3BHK FLAT Rs.60L
99620 03409

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

## INDEPENDENT HOUSE

IND.HOUSE FOR SALE
@ MADAMBAKKAM
PADMAVATHY NAGAR - Nr AMUDHU SUPER MARKET
3/4 GROUND LAND WITH BUILDING
N.FACING -G.FLR- +1
BUA-1450 SQFT LAND-40X45
95001 96316

INDIVIDUAL HOUSE IN
FIRST FLOOR FOR SALE
@ SANATORIUM JUDGE COLONY
3-BHK 1050 Sqft
CCP NORTH FACING
13 years old
95001 96316

IND. HOUSE FOR SALE
@NEHRU NAGAR
3 BHK
FLAT FOR RESALE
@HASTHINAPURAM
3 BHK , 1900 Sqft
FIRST FLOOR, LIFT, CCP
80722 30451

IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
FLATS FOR SALE
@ CHROMPET
1,2,3 BHK
AVAILABLE
80722 30451

DUPLEX HOUSE
RESALE @ CHROMEPET
NEW COLONY
NR .CARE HEALTH LAB
3 BEDROOM , 2 HALL, 1 KITCHEN
1050-Sqft LAND
2025-Sqft BUILTUP AREA
CCP. 12 YEARS
98408 75747 / 99400 73542


# சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல பூஜை



சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல பூஜை விழா நவம்பர் 17ஆம் தேதி ஆரம்பமாகிறது. இதற்கான கோயில் நடை நவம்பர் 16ஆம் தேதி மாலை திறக்கப்படுகிறது.பக்தர்கள் கோயிலுக்கு வர சுவாமி தரிசனம் பெற ஆன்லைன் முன்பதிவு கட்டாயம். இந்த முன்பதிவு தொடங்கியுள்ளது. தற்போது முன்பதிவு செயலியில் ஏ.ஐ. தொழில்நுட்பத்துடன் பல மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தரிசன தேதி மற்றும் நேரத் தேர்வு, காலநிலை தகவல், அவசர உதவி, மருத்துவ சேவை உள்ளிட்ட பல வசதிகளுடன் இந்த புதிய செயலி செயல்படுகிறது, என திருவிதாங்கூர் தேவசம் போர்டு தெரிவித்துள்ளது.

# சங்கடத்தை தீர்க்கும் சங்கடஹர சதுர்த்தி

சங்கடஹர சதுர்த்தி (அல்லது) சங்கஷ்டி சதுர்த்தி என்பது, வாழ்க்கையில் ஏற்படும் தடைகளையும் துன்பங்களையும் நீக்கும் விநாயகப்பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட முக்கியமான நாளாகும். ‘சங்கட’ என்பது துன்பம் என்றும், ‘ஹர’ என்பது நீக்குதல் என்று பொருள். சங்கடஹர என்றால், சங்கடங்களில் இருந்து விடுதலை அல்லது துன்பங்களில் இருந்து விடுபடுதல் என்று பொருள். விநாயகரை வழிபடு வதன் மூலம், ஒருவர் துன்பத்திலிருந்து விடுபடலாம். சனிக்கிழமைகளில் வரும் சங்கடஹர சதுர்த்தியில் விநாயகரை வழிபடுவது, சகல கிரக தோஷங்களையும், சங்கடங்களையும் நீக்கும் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. சனிக்கிழமையோடு சேர்ந்து வரும் சங்கடஹர சதுர்த்தியின் போது விநாயகருக்குத் தீபமேற்றி வழிபாடு செய்தால், நம்முடைய சங்கடங்கள் அனைத்தும் விலகும், மேலும் சனி தோஷமும் நீங்கும்.



குரோம்பேட்டை குமரன் குன்றம் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி முன்னிட்டு சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.





குரோம்பேட்டை புருஷோத்தம நகர் ஸ்ரீ விஜய கணபதி லட்சுமி நாராயண பெருமாள் ஆலயத்தில் கந்த சஷ்டி பெருவிழா விமர்சையாக நடைபெற்றது சூரசம்காரத்தை முன்னிட்டு விசாகப் பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது மாலை விசாக பெருமானுக்கு அஸ்தினாபுரம் சாலையில் உள்ள பாதல் பிளாட்டில் இருந்து சீர்வரிசைகள் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டது பின்பு விசாகப்பெருமான் வள்ளி தேவ சேனாக்கு மாலை மாற்றி திருக்கல்யாணம் சிவாச்சாரியார்களால் நடத்தப்பட்டது திருமணத்தை முன்னிட்டு விசாகபெருமானுக்கு மொய் காசுகள் பக்தர்களால் செலுத்தப்பட்டது அதன்பின் சிறப்பு தீபாரணை காட்டப்பட்டு பக்தர்களுக்கு திருமாங்கல்ய சரடு வழங்கப்பட்டது இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு திருக்கல்யாணத்தை கண்டு களித்தனர் ஆலய நிர்வாகிகள் மற்றும் ஆலய சிவாச்சாரியார் சிவக்குமார் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்

## எடப்பாடியை கைது செய்யுங்கள் திண்டுக்கல் சீனிவாசன் திடீர் பேச்சு

கோடநாடு வழக்கில் பழனி சாமி ஏ1 குற்றவாளியாக இருந்தால் பிடித்து உள்ளே போடுங்கள்; யார் வேண்டாம் என்றது? திமுக ஆட்சிதானே நடக்கிறது" என்று அதிமுக பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன் ஆவேசமாக கூறினார்.

## சவுக்கு சங்கர் கைது

மூத்த பத்திரிகையாளர் சவுக்கு சங்கர் கைது செய்யப்பட்டார். காலையிலேயே தான் கைதாக போவதாக வீடியோ வெளியிட்டு இருந்தார். திமுக மீது தொடர்ந்து குற்றச்சாட்டுகளை அவர் கூறிவந்தது குறிப்பிடத் தக்கது

## கேஜரிவாலுக்கு பஞ்சாபில் சொகுசு மாளிகை

பாரதிய ஜனதா கட்சி வெளியிட்டு அறிக்கையில், ஆம் ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் கேஜ்ரிவால் தன்னை சாமானிய மனிதர் என்று கூறி நடித்து வருகிறார். ஆனால் அவர் டெல்லியில் தனக்காக பிரம்மாண்ட சீஷ் மஹாலை உருவாக்கினார். அந்த மாளிகையில் இருந்து வெளியேறிய பிறகு தற்போது பஞ்சாபின் சூப்பர் முதல்வராக அவர் செயல்பட்டு வருகிறார். தற்போது டெல்லி மாளிகையைவிட சண்டிகரில் 7 நட்சத்திர அந்தஸ்து கொண்ட ஆடம்பர மாளிகை அவருக்கு வழங்கப்பட்டு உள்ளது. இது கேஜ்ரிவாலின் சீஷ் மஹால் 2.0 ஆகும். இவ்வாறு அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## முடக்கத்தான் தோசை



தேவையானவை:

1. பாசிப்பருப்பு 100 கிராம், 2. முடக்கத்தான் கீரை 200 கிராம், 3.புழுங்கல் அரிசி 250 கிராம், 4. இஞ்சி ஒரு சிறிய துண்டு, 5. பூண்டு 4 பல், 6. எண்ணெய் 100 மில்லி, 7. உப்பு தேவையான அளவு


செய்முறை:

முடக்கத்தான் கீரையை ஆய்ந்து சுத்தம் செய்து கொள்ளவும். பாசிப்பருப்பை ஒரு மணி நேரமும் அரிசியை இரண்டு மணி நேரமும் ஊறவைத்தது வடிக்கவும். பின்னர் இதனுடன் முடக்கத்தான் கீரை, தோல் நீக்கி நறுக்கிய இஞ்சி, பூண்டு ஆகியவற்றை சேர்த்துத் நைஸாக அரைக்கவும். பின்னர் தேவையான அளவு உப்பு சேர்த்துத் கலந்து கொள்ளவும். இதனை ஆறுமணி நேரம் மூடி அப்படியே வைக்க வேண்டும். அடுப்பில் தோசைக்கல்லை வைத்துத் சிறிதளவு எண்ணெய் விட்டு, மாவை தோசையாக ஊற்றவும். அடுப்பை மிதமான தீயில் வைத்து இரண்டு பக்கமும் திருப்பி போட்டு வேகவைத்துத் எடுக்கவும். இதை சட்னியுடன் பரிமாறவும் சுவையான ஆரோக்கியமான மருத்துவ முடக்கத்தான் கீரை கால்வலி, மூட்டுவலி உடையவர்கள் இதனை சாப்பிடலாம்.

## பந்து தாக்கியதில் ஆஸ்திரேலியா கிரிக்கெட் வீரர் உயிரிழப்பு

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் வீரர் உயிரிழந்ததைத் தொடர்ந்து சர்வதேச 2வது டி20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா, ஆஸ்திரேலிய அணியினர் கருப்புப் பட்டை அணிந்து விளையாடினர். இந்தப் போட்டி மெல்பர்ன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. மெல்பர்ன் நகரைச் சேர்ந்த 17 வயது இளம் வீரரான பென் ஆஸ்டின் என்பவர், பெர்ன்ட்ரீ கல்லி கிரிக்கெட் கிளப்பில் வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவரது கழுத்துப் பகுதியில் பந்து அதிவேகமாகத் தாக்கியது. இதில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 2 நாள் தீவிர சிகிச்சை அளித்தும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## மழைக்காலங்களில் மளிகைப் பொருட்களைப் பராமரிக்க 10 எளிய வழிகள்...



மழைக்காலங்களில் வீட்டையும், மளிகைப் பொருட்களையும் பாதுகாப்பது சற்று கூடுதலான வேலை தான். அந்த வகையில் மளிகைப் பொருட்களைப் பாதுகாக்கும் எளிய வழிமுறைகள் குறித்து பார்ப்போம்.

1. மழைக்காலங்களில் காற்று புகாத உலர்ந்த கொள்கலனில் மளிகைப் பொருட்களை சேமித்து வைப்பதோடு, புழுக்கள் மற்றும் பூச்சிகள் வராமல் தடுக்க, வேப்பிலையை போட்டு வைக்க வேண்டும்.

2. உயரமான இடத்தில் ஈரப்பதத்தால் பாதிக்கப் படாத படி பருப்பு மற்றும் பொருட்களை வைப்பதோடு, நல்ல வெயி லில் உலர்த்திய பின்பு சேமிப்பது மிகவும் அவசியமாகும்.

3.மழைக்காலங்களில் காய்கறிகள் மற்றும் கீரைகள் சீக்கிரமாக அழுகிவிடும் என்பதால் தேவைக்கேற்ப அவ்வப்போது வாங்கிப் பயன்படுத்துவது சிறந்தது.

4.சமையலறை குப்பைகளை தினமும் அப்புறப்படுத்துவதோடு, சமையலறை அலமாரிகளை சுத்தப்படுத்தி ஈரப்பதம் இல்லாமல் வறண்ட நிலையில் பார்த்துக் கொள்வதால் மளிகைப் பொருட்களின் ஆயுள் நீட்டிக்கப்படும்.

5. கண்ணாடி பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகள், பேப்பர் பைகளில் மளிகைப் பொருட்களை சேமித்து வைப்பதனால் ஈரப்பதம் இல்லாமல் உலர்ந்து காணப்படும்.

6.மழைக்காலங்களில் மசாலாப்பொருட்கள் கட்டியாகவோ அல்லது பூஞ்சை பிடிக்கும் என்பதால் சேமிப்பதற்கு முன்பாக வாணலியில் வறுத்து ஆறவைத்து கண்ணாடி கொள்கலனில் சேமித்து வைப்பதனால் நீண்ட நாள் கெடாமல் பாதுகாக்கப்படும்.

7.சர்க்கரை வைத்திருக்கும் அலமாரிகளில் 10 நாட்களுக்கு ஒரு முறை வினிகர் மற்றும் தண்ணீரின் கலவை யால் சுத்தப்படுத்தி உலர வைக்க வேண்டும். ஈரப்பத த்தை உறிஞ்சுவதற்காக செயல்படுத்தப்பட்ட கரி, பேக்கிங் சோடா மற்றும் வேப்ப இலைகளைப் போட்டு வைப்பது ஈரப்பதத்தை உறிஞ்ச உதவி செய்யும்.

8.மழைக்காலங்களில் குளிர்சாதனப் பெட்டியில் அதிக சுமைகளை ஏற்றாமல் இடைவெளி விட்டு காற்றோட்டமாக வைப்பதோடு காய் கறிகளை வைக்கும் போது உலர வைத்து சேமிப்பது நல்லது.

9.வீட்டில் தயாரிக்கப்பட்ட ஊறுகாயை உலர்ந்த கண்ணாடி அல்லது பீங்கான் ஜாடிகளில் சேமித்து வைப்பதோடு, அதனை எடுக்கும் போது உலர்ந்த கரண்டிகளை பயன்படுத்துவது நல்லது.

10. மழைக்காலங்களில் அரிசி, பருப்பு, தானியங்கள், மாவு, ரவை போன்ற மளிகைப் பொருட்களை 15 நாட்களுக்கு ஒரு முறை மட்டும் தேவைப் படும் அளவிற்கு வாங்கிப் பயன் படுத்துவதால் பராமரிக்கும் டென்ஷன் குறையும்.

மழைக்காலம் முடியும் வரை மேற்கூறிய வழிமுறைகளை கையாள்வதன் மூலம் மளிகை பொருட்கள் வீணாவது தடுக்கப்படுவதோடு, பணமும் விரயமாகாது.

## 9 சட்டங்களுக்கு கவர்னர் ஒப்புதல்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 9 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல். அளித்தார். 2 முறை நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு நிதி நிர்வாக பொறுப்புடைமை மசோதாவுக்கும் ஆளுநர் ரவி ஒப்புதல். அளித்து உள்ளார். முன்னாள் எம்.எல்.ஏ ஓய்வூதியத்தை உயர்த்துவது சிறு குற்றங்களுக்கு சிறைத் தண்டனைக்கு பதிலாக அபராதம் விதிக்கும் மசோதா உள்பட 9 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தார்.

## தெலுங்கானா அமைச்சரானார் அசாருதீன்

இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன், தெலுங்கானா அமைச்சராக பதவியேற்றார்.

தெலுங்கானா சட்ட மேலவை உறுப்பினராக ஏற்கனவே அசாருதீன் நியமிக்கப்பட்ட நிலையில் அமைச்சரானார்.

## வீடு தேடி வரும் ரேஷன் பொருள் வயது வரம்பு குறைப்பு

தமிழக அரசு தாயுமானவன் என்ற திட்டத்தின் கீழ் முதியோர் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருட்களை இலவசமாக வழங்கி வருகிறது 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை வழங்கப்பட்டு வருகிறது தற்போது எந்த வயது வரம்பை குறைத்து 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வீட்டுக்குச் சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.

## வணிக சிலிண்டர் விலை குறைப்பு

சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டர் விலை ரூ.4.50 குறைந்து ரூ.1,750க்கு விற்பனை, வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றம் இன்றி ரூ.868.50க்கு விற்பனை செய்யப்படுகிறது.

WANTED
FEMALE STAFF FOR OFFICE
DESK JOB/AGE 22-54
SALARY - Rs. 10,000/-
WASCA - 3G AQUA
99520 32070
98411 30387

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular Kitchen
Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

BUILDING CONSTRUCTION
» RENOVATION » INTERIOR
INCLUDING OHT & SEPTIC TANK
ARCHITECTURAL DESIGN
ENGINEER SUPERVISION
BRANDED MATERIALS
KR HOMES
80724 99969

## உதடுகளுக்கு குளிர்கால பராமரிப்பு

குளிர்காலத்தில் நம்முடைய சருமம் வறண்டு போவதற்கு காரணம் உடலிலுள்ள நீரின் அளவு குறைவது தான். இதனால் குறிப்பாக உதடுகள் வறண்டு போக ஆரம்பிக்கும். உதடுகளில் எண்ணெய் சுரப்பிகள் இல்லாததால் உதடுகளால் நீர்த்தரத்தைப் பற்றிக் கொள்ள முடியாது. இதனால்தான், உதடுகள் வறட்சியோடு சேர்த்து வெடிப்படையவும் செய்கின்றது. எனவே உதட்டுக்கு எண்ணெய் பசை தன்மையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தேங்காய் எண்ணெய்யை ஒரு ஸ்பூன் எடுத்துக்கொண்டு அதில் ஐந்து சொட்டு அளவுக்கு ஆலிவ் எண்ணெய்யை ஊற்ற வேண்டும். பின்னர், அதை லேசாகச் சூடு படுத்தி காட்டன் துணியில் நனைத்து அதை உதட்டில் தேய்க்க வேண்டும். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, காட் டன் துணியால் அதிகப்படியாக இருக்கக்கூடிய எண்ணெய் பசையைத் துடைத்துக் கொள்ள வேண்டும். இதை வாரத்துக்கு இரு முறை செய்தால் உதடுகள் வெடிக்கா மல் இருக்கும். சிலருக்குக் குளிர்காலத்தில் உதடுகள் நிறம் மாற ஆரம்பிக்கும். அவர்களுக்கான டிப்ஸ் கிரீன் டீ தற்போது பெரும்பாலானோர்களின் வீட்டிலும் பயன்படுத்துகிறார் கள். அந்த கிரீன் டீ பேக்கை எடுத்து சிறிது நேரம் பிரிட்ஜில் வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், மெதுவாக அந்த டீ பேக்கால் உதட்டை தேய்த்துக்கொள்ள வேண்டும். ஒரு



நிமிஷங்கள் வரை தேய்த்துக்கொள்ள வேண்டும். பின்னர், உலர்ந்த காட்டன் துணியால் உதடு களைத் துடைக்கும் போது இயல்பான பிங்க் கலரில் உதடுகள் மாறிவிடும்.பிங்க் நிற ரோஸ் இதழ்களை ஒரு நாள் இரவு முழுவதும் தேனில் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். அதை உதட்டின் மேல் தடவிக் கொண்டு மெதுவாக மசாஜ் போன்று செய்ய வேண்டும். அந்தக் கலவை வாயினுள் போனாலும் எந்தப் பிரச்னையும் கிடையாது. அதனால், இரண்டு அல்லது மூன்று முறை மசாஜ் செய்ய வேண்டும். முதலில் கொஞ்சம், அடுத்து கொஞ்சம் என மேலே மேலே அந்தக் கலவைகளை தடவி மசாஜ் செய்ய வேண்டும். பின்னர், 10 நிமிடங்கள் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு உதடுகளைக் கழுவி விட்டுப் பார்க்கும் போது உதடுகள் மிகவும் மென்மை யாகவும், பிங்க் நிறத்திலும் இருக்கும். கடைகளில் பாதாம் எண்ணெய் கிடைக்கும். அதில் ஸ்வீட் பாதாம் எண்ணெய்யை வாங்கிக் கொள்ள வேண்டும். அந்த எண்ணெய்யை ஒரு துளி அல்லது இரண்டு துளி இட்டு இரவு தூங்குவதற்கு முன்னர் உதடுகளில் அப்ளை செய்து கொள்ள வேண்டும். காலையில் பார்க்கும் பொழுது உதடுகள் ரொம்ப அழகாக இருக்கும்.


## வாசகர்களுக்கு அறிவிப்பு

GST ROAD NEWS Weekly News Paper

குரோம்பேட்டை, தாம்பரம், பல்லாவரம், சேலையூர், என தனித்தனியாக 4 பதிப்புகளாக ஞாயிறு தோறும் இலவச பிரதியை வெளியிட்டு வரும் ஜி.எஸ்.டி.ரோடு நியூஸ் லட்சக்கணக்கான வாசகர்களைக் கொண்ட ஒரே உள்ளூர் வார பத்திரிகை. இப்பொழுது வாசகர்களின் வேண்டுகோளை ஏற்று **whatsapp** சேனலை உருவாக்கி உள்ளது. இதில் அன்றாடம் நடக்கும் உள்ளூர் செய்திகள் மற்றும் மாநில செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள மற்றும் வாரந்தோறும் வெளிவரும் ஜி.எஸ்.டி.ரோடு நியூசின் இ.பேப்பர் மற்றும் சமூக வலைத்தளங்களை உள்ளடக்கிய பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ஜி.எஸ்.டி. ஆன்லைன் மீடியா **youtube** சேனல், **www.gstroadnews.com** என்ற இணையதளத்தின் மூலமாகவும் கண்டு களிக்கலாம் பார்த்து படித்துக் கொள்ள சேனலை பார்த்து பின் தொடருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகம்.





தாம்பரம் மாநகராட்சி மாமன்ற கூட்டத்திற்கு கருப்பு உடையணிந்தவாறு வந்த அதிமுகவினர் கொசுவலை போர்த்தியவாறு நாய், மாடு, பன்றி பொம்மைகளுடன் வந்ததால் பரபரப்பு, மேயர் க.வசந்தகுமாரி வெளியேற உத்தரவிட்ட நிலையில் 5 நிமிடம் கழித்து வெளியேறியதால் பரபரப்பு. தாம்பரம் மாநகராட்சி மாமன்ற கூட்டம் மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் கூடியது, ஆணையாளர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் கலந்துக்கொண்ட நிலையில், அதிமுக மாமன்ற எதிர்கட்சி தலைவர் சங்கர் தலைமையில் 10 அதிமுக கவுன்சிலர்கள் கருப்பு உடையணிந்து கொசுவலையை போர்த்தியவாறு நாய், மாடு, பன்றி பொம்மைகளுடன் ஊர்வலமாக மாமன்ற கூட்டத்திற்கு சென்றனர். இதற்கு மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அதிமுகவினரை வெளியேற சொல்லி கோஷமிட்டனர். இதனால் மாமன்ற கூட்டம் சிறிது நேரம் நடைபெறாமல் கூட்ட அரங்கில் பரபரப்பு ஏற்பட்டது, இதனையடுத்து அதிமுகவினர் வெளியேறி மன்ற கூட்ட அரங்கு முன்பாக தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## டாக்டர் வி.சந்தானத்துக்கு விருது



25.10.25 அன்று நடந்த உலக மூத்தோர் தினம் முன்னிட்டு சென்னை புரோபஸ் கிளப் 50 ஆண்டிற்கும் மேலாக சமூகப் பணி ஆற்றி வரும் மூத்த சமூக ஆர்வலர் சேவா ரத்னா டாக்டர் வி.சந்தானம் அவர்களின் சேவையை அங்கீகரித்து விருதும் சான்றிதழும் அளித்து பாராட்டு விழா நடத்தினார்கள். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள்தலைமைச் செயலர் டி.எஸ்.ஸ்ரீதர் அவர்கள் இந்த விருதினை வழங்கினார்கள். இந்த விழா ஆழ்வார்பேட்டையில் உள்ள சோவியத் கலாச்சார மையத்தில் நடந்தது.



மத்திய அஸ்தினாபுரம் அரிமா சங்கம் சார்பில் அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் மற்றும் பள்ளிக்கும் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் முதலாம் துணை ஆளுநர் மணிசங்கர், இரண்டாம் துணை ஆளுநர் நரசிம்மன் மற்றும் வட்டார தலைவர் எம்.ஜெயபால், கே.எம்.ஜே.அசோக், மண்டலத் தலைவர் இ.ராஜமாணிக்கம், வெற்றிசெல்வி, அழகப்பன், கஜேந்திரன், செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 10 லட்சம் லேட்டாப் கொள்முதல்

கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க ஒரு மடிக்கணினியை ரூ.21,650க்கு கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்து உள்ளது.

முதற்கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகளை கொள்முதல் செய்வதற்கு ஹெச்.பி, டெல், ஏசர் ஆகிய 3 நிறுவனங்களுக்கு பணி ஆணையை எல்காட் நிறுவனம் வழங்கியது.

மார்ச் மாத இறுதிக்குள் மடிக்கணினி விநியோகம் செய்யும் பணியினை முழுமையாக முடிக்க திட்டமிட்டு உள்ளனர்.

## வெளிநாட்டினருக்கு மேலும் ஒரு அதிர்ச்சி!

வெளிநாட்டினருக்கான பணி உரிமத்தை தானாக நீட்டிக்கும் முறையை முடிவுக்குக் கொண்டு வந்தது அமெரிக்க அரசு !பணி அனுமதி அங்கீகார ஆவணத்தை புதுப்பிக்க விண்ணப்பிக்கும் வெளிநாட்டினருக்கு இனி தானாக அனுமதி நீட்டிக்கப்படாது. அதனை புதுப்பிக்கும் முன்பு, அவர்கள் முழுமையான மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என அறிவிப்பு.

## ‘சிற்றரசர்’ செங்கோட்டையன்

ஈரோடு கோபிசெட்டி பாளைய பகுதியின் சிற்றரசர் போல செயல்பட்டு வந்தார் செங்கோட்டையன்.

அவர் விடுவிக்கப்பட்டபின் விடுதலை கிடைத்தது போல இனிப்பு கொடுத்து, பட்டாசு வெடித்து கொண்டாடியுள்ளனர்”என்று எடப்பாடி கூறினார்.

இதற்கிடையே கோபி செட்டி பாளையத்தில் செங்கோட்டையன் அலுவலகம் முன்பு இருந்த பேனர்களில் எடப்பாடி படம் அழிக்கப்பட்டது.

## வால்பாறை செல்ல நவ.1 முதல் இபாஸ் கட்டாயம்.

உயர்நீதிமன்ற உத்தரவின் படி வால்பாறை செல்ல நவம்பர் 1ஆம் தேதி முதல் இபாஸ் கட்டாயம் என மாவட்ட நிர்வாகம் அறிவிப்பு. சுற்றுலா பயணிகள் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை எடுத்துச் செல்லக் கூடாது என்றும் கண்டிப்பு.

## ORSL என்ற லேபிளை பயன்படுத்தி கரைசலை விற்பனை செய்தால் நடவடிக்கை சுகாதாரத்துறை.

தமிழகத்தில் உள்ள மருந்தகங்கள் மற்றும் கடைகளில் ORSL என்ற லேபிளை பயன்படுத்தி கரைசலை விற்பனை செய்தால் நடவடிக்கை.

உலக பொது சுகாதார அமைப்பு (WHO) மற்றும் தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனம் (ICMR) என அச்சிடப்பட்ட ORSLகள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் தமிழ்நாடு சுகாதாரத்துறை உத்தரவு.

## சென்னையில் நாய் வளர்க்க ரூபாய் 5000 கட்டணம்

சென்னை மாநகராட்சி பகுதியில் வீடுகளில் செல்லப்பிராணி வளர்ப்பவர்கள் சென்னை மாநகராட்சியிடம் உரிமம் பெறாவிட்டால் ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும். செல்லப்பிராணிகளை பொது இடங்களில் அழைத்து செல்லும்போது கழுத்து பட்டை இன்றி அழைத்து சென்றால் உரிமையாளருக்கு ரூ.500 அபராதம் விதிக்கப்படும். பொது இடங்களில் செல்லப் பிராணிகள் பொதுவெளியில் கழிவு ஏற்படுத்த உரிமையாளர்கள் அனுமதிக்க கூடாது. பொது இடங்களில் செல்லப்பிராணிகள் கழிவு ஏற்படுத்தினால், அதனை சுத்தம் செய்வது உரிமையாளரின் கடமை. வரும் நவம்பர் 24ம் தேதி முதல் இந்த விதிமுறைகளை அமல்படுத்த சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கரூர் சம்பவம் அஜித் பரபரப்பு பேட்டி

கரூர் சம்பவம் குறித்து நடிகர் அஜித்குமார் அளித்த பேட்டியில் கூறியதாவது: நான் யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை. கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்திற்கு ஒருவர் மட்டும் பொறுப்பல்ல; நாம் அனைவருக்கும், ஊடகங்களுக்கும் அதில் பங்கு உண்டு. கூட்டம் திரட்டுவதை பெரிய விஷயமாக்குவதை நிறுத்த வேண்டும். கிரிக்கெட்டில் கூட்டம் கூடினாலும் இப்படி நடப்பதில்லை. தியேட்டரில் முதல் நாள் முதல் காட்சி, பிரபலங்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் மட்டும் ஏன் இப்படி? இது நம் திரையுலகை உலகளவில் தவறாகக் காட்டுகிறது. ரசிகர்களின் அன்புக்காகவே நடிகர்களான நாங்கள் உழைக்கிறோம். ஆனால், உயிரைப் பணயம் வைத்து அன்பு காட்ட வேண்டாம். அன்பை காட்ட வேறு வழிகள் உண்டு. ஊடகங்களும் பொறுப்புடன் இருக்க வேண்டும் என்றார்.

3,4 BHK INDEPENDENT DUPLEX VILLA
FOR SALE @ MADAMBAKKAM



BALA GARDEN EXTENSION
NR. MANICKAM NAGAR (NOOTHENCHERY)
☑ Modular Kitchen ☑ CCTV ☑ RO Water
☑ Fully Furnished
☑ Inverter UPS
GN BUILDERS
5/6, MARUTHI NAGAR, MADAMBAKKAM MAIN ROAD, MADAMBAKKAM, CHENNAI - 600 126.
98402 71915 / 86676 36110

Newly Opened
SRI SASTHA MAHAL A/C
Bookings Open
The Group of Sankar Constructions
Fully Airconditioned Thirumana Maaligai
In Hasthinapuram, RP Road



- Main Hall capacity of 500 persons (Floating 1000 Persons)
- Dining hall capacity of 200 persons
- 14 A/C Rooms
- Modular Kitchen with store room and service lift for dining
- Passenger Lift capacity of 16 members
- CCTV Camera for whole building
- Vinayagar temple is within the premises
- The hall is fully equipped with stand by Generator
- Pooja items and Unjal available
- Ample car parking available for both four wheelers and two wheelers
- Valet Car Parking Available

No.32, Hariharan Towers, R.P.Road, Hasthinapuram, Chrompet - 44.
98416 59929 / 98416 59931 / 90030 10611



Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725